செய்தி வெளியீடு எண்: 264 நாள்: 24.04.2019

## <u>செய்தி வெளியீடு</u>

<u>தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. ஆரோக்கிய ராஜீவ் அவர்கள் கத்தார் நாட்டில் தோஹா நகரில் நடைபெற்று வரும் ஆசிய தடகள போட்டியில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 4x400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப்பதக்கம் வென்றதையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.4.2019) திரு. ஆரோக்கிய ராஜீவ் அவர்களுக்கு அனுப்பிய வாழ்த்து கடிதத்தின் விபரம்:</u>

“தமிழ்நாட்டைச் சேர்ந்த தாங்கள் தற்பொழுது கத்தார் நாட்டில் தோஹா நகரில் நடைபெற்று வரும் 2019-ஆம் ஆண்டிற்கான ஆசிய தடகள போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 4X400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தய போட்டியில், வெள்ளிப்பதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளீர்கள் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஆசிய தடகள போட்டியில் கலந்து கொண்டு, வெள்ளிப்பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்த தங்களுக்கு, என் சார்பாகவும், தமிழ்நாட்டு மக்கள் சார்பாகவும் எனது மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கள் இதுபோன்று சர்வதேச அளவில் நடைபெறும் பல்வேறு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டு, மேலும் பல சாதனைகள் புரிந்து, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்திட வேண்டும் எனவும், இத்தருணத்தில் மனதார வாழ்த்துகிறேன்.”

*******

**வெளியீடு : இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை .9.**